**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. DVC.2/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மதியழகன் | Prosecution | PW2 cross |
| Father Name | இளையபெருமாள் | Court | JM, Court, Sirkali. |
| Village | அனுமந்தபுரம் | Taluk | Sirkali. |
| District | மயிலாடுதுறை | Age | 63/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade –III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

21.11.2025.

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. 1 ம் எதிர்மனுதார் ஆஜர்**
**எதிர் மனுதாரர்கள் குறுக்கு விசாரணை**

என் மகளுக்கும் 1 ம் எதிர் மனுதாரருக்கு பேசி முடித்து 2013 ஆண்டு திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். 1 ம் எதிர் மனுதாரர் திருமணத்திற்கு முன்பிருந்தே வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். 1 ம் எதிர் மனுதாரரின் தகப்பனார் அவர் ஊரிலேயே தனியாக மளிகை கடை வைத்தும் அவருக்கு சொந்தமான விவவாய நிலங்களை சாகுபடி செய்தும் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். 4 வது எதிர் மனுதாரர் அவர் தனியாக வேலை பார்த்து வருகிறாரா என்றால் அவர் வேலை செய்யாமல் வீட்டில் உள்ளார். 5 ம் எதிர் மனுதாரர் அவருடைய கணவரின் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவர்கள்மேல வானகிரியில் வசிக்கிறார் என்றால் சரிதான்.

எனக்கு எத்தனை மகள்கள் என்றால் 4 மகள்கள் ஆகும். 1 ம் மனுதார் எனது மூத்த மகள். எனது மகள்கள் அனைவருக்கும் திருமணம் முடிந்துவிட்டதா என்றால் முடிந்துவிட்டது. அவர் அவர்கள் அவர் அவர் கணவர் வீட்டில் வசிக்கிறார்களா என்றால் ஆமாம். பொதுவாக திருமணம் முடிந்த பிறகு பெண்கள் அவர்கள் கணவர் வீட்டில் தான் வசிப்பார்கள் என்றால் சரிதான். 5 வது எதிர்மனுதாரர் அவர் கணவர் வீட்டில் தான் வசிக்கிறார் என்றால் 5 வது எதிர்மனுதாரர் யார் என்று அவரது பெயரை சொன்னால் தான் சொல்லமுடியும். 5 வது எதிர்மனுதாரர் பெயர் திலகவதி என்றாலும் அவர் அவருடைய கணவர் வீட்டில் வசிக்கிறார் என்றாலும் சரிதான். ஆனால் அவருடைய தாயார் வீட்டிற்கும் போவார் வருவார். எனது மகளுக்கு நான் திருமணம் செய்து கொடுப்பதற்கு முன்பு நான் ஒரு கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபராக

இருந்தேனா என்றால் சரிதான் ஆனால் 2017 ல் அந்த வழக்கு முடிந்து விடுதலை ஆகிவந்துவிட்டேன்.

எங்கள் ஊரில் நான் தான் முக்கியஸ்தர் என்றாலும் என்ன பிரச்சைனை என்றாலும் நான் தட்டி கேட்பேன் என்றாலும் நான் தட்டி கேட்க மாட்டேன் ஞாயமாக பேசுவேன். எனக்கு கட்ட ப்பஞ்சாயத்து பேசும் பழக்கம் எனக்கு உண்டா என்றால் இல்லை. 1 ம் எதிர் மனுதாரர் திருமணம் முடித்து எப்போது வெளிநாடு சென்றார் என்றால் 6 மாதம் கழித்து சென்றார். என் மகளுக்கு வளைகாப்பை என் வீட்டில்செய்தேன் என்றால் 1 ம் எதிர் மனுதார் வீட்டில் வைத்து செய்தேன். அதற்கு என் உற்றார் உறவினர்களை அழைத்தேனா என்றால் அழைத்தேன். அதே போல தீபாவளி பொங்கள் சமயத்தில் என் மகளுக்கு சீர் செய்யும் பழக்கம் உண்டா என்றால் எப்போதும் செய்வேன். அந்த சீர்களை 1 எதிர் மனுதாரர் வீட்டிற்கே சென்று செய்தேனா என்றால் ஆமாம்.

1 ம் எதிர் மனுதாரருக்கும் எனது மகளுக்கும் 2 குழந்தைகள் என்றால் சரிதான். என் மகளுக்கும் 1 ம் எதிர் மனுதாரருக்கும் என்ன பிரச்சனை என்று நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது என்ன பிரச்சனை என்றால்1 ம் எதிர் மனுதாரர் வெளிநாடு சென்ற பிறகு அவரது பெற்றோர்கள் என் மகளை கொடுமை செய்ய ஆரமித்தார்கள். மேற்படி கொடுமைகள் பற்றி எனது மகள் சொல்லதான் எனக்கு தெரியும் என்றாலும் நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். ஏதாவது பிரச்சனை என்றால் என்னை கூப்பிடுவார்கள் நான் அங்கு செல்வேன்.

எனக்கு ராமலிங்கம் என்கிற மைத்துனர் உள்ளார்என்றால் சரிதான். அவர் அடிக்கடி என் மகளின் புகுந்த வீட்டிற்கு சென்று அவரை பார்த்து நலம் விசாரித்து விட்டுவருவார் என்றால் அவர் செல்ல மாட்டார். நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி நபர் அடிக்கடி செல்லவார் என்றாபலும் அது பற்றி எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல எனக்கு தெரியாமல் அவர் செல்ல மாட்டார். என் மகளுக்கும் 1 ம் எதிர் மனுதாரருக்கும் நல்ல முறையில் திருமண வாழ்க்கை அமைந்தது என்றாலும் அதன் அடிப்படையில் 2 குழந்தைகள் பிறந்தது என்றாலும் சரியல்ல நான் எனது மகள் அனுபவித்த கொடுமைகள் பற்றி எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது மகளுக்கு 2019 ம் வருடம் 12 வது மாதம் இரண்டாவது குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அதன் பிறகு 03.10.2021 ல் ஒரு பிரச்சனை ஏற்பட்டதாகவும் என் மகளை 1 ம் எதிர் மனுதாரர் எனது வீட்டில் வந்து விட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 03.10.2021 ல் ஜவுளி எடுக்க என் மகள் என் உடன் வந்ததாகவும், இரவு 9.00 மணிக்கு 1 ம் மனுதாரர் அவரது கணவர் வீட்டிற்கு திரும்ப சென்ற போது

பிரச்சனை ஏற்பட்டதாகவும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என் உடன் 1 மனுதாரர் எத்தனை மணிக்கு அவரது கணவர் வீட்டிலிருந்து புறப்பட்டுவந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் எங்கு சென்று எந்த ஊரில் ஜவுளி எடுத்தோம் எவ்வளவு நேரம் ஆனது யார் யார் உடன் சென்றோம் ஆகிய விபரங்களை நான் முதல் நிலை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொ'லியுள்ளது போல எனது மகளை அந்த நேரத்தில் தனியாக என் மருமகன் வீட்டிற்கு அனுப்பிவைத்திருக்க மாட்டேன் என்றாலும் பொறுப்பான தந்தை என்கிற முறையில் நானும் என் மகளுடன் சென்றிருப்பேன் என்றாலும் இதிலிருந்தே நான்சொல்வது போல எதுவும்நடக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல. நான் மாயவரத்திலிருந்து கொள்ளிடம் செல்ல வேண்டும் , என் மகள் பூம்புகார் செல்ல வேண்டும் ஆகவே என் மகளை மாயவத்திலிருந்து பேருந்தில் ஏற்றி அனுப்பினேன்.

பொதுவாக திருமணம் போன்ற நிகழ்ச்சிக்கு ஜவுளி எடுக்க வேண்டும் என்றால் மருமகனையும் உடன் அழைத்து செல்வார்கள் என்றால் எனது மருமகன் என்னுடைய மற்ற பெண்கள் திருமண நிகழ்வு எதிலுமே கலந்து கொண்டதில்லை. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மருமகன் என்னிடம் அவருக்கும் எனது மகளுக்கும் நடக்கும் பிரச்சனை பற்றி அவ்வபோது என்னிடம் கூறுவாரா என்றால் சரிதான் தொலைபேசி மூலமாக கூறுவார். நான் உடனடியாக நேரடியாக அங்கு சென்று அதனை தீர்த்து வைப்பேன். 03.10.2021 அன்று என்னுடன் ஜவுளி எடுக்க எனது மகள் வரவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் எனது மகளுக்கும் எனது மருமகனுக்கும் என்ன பிரச்சனை என்பதே தெரியாது என்றாலும் எனது மகள் சொன்னதன் அடிப்படையில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது மருமகன் தான் என் மகளை அன்று ஜவுளி எடுக்க அழைத்து வந்தார். எனது மகள் 11.00 மணிக்கு எனது வீட்டிற்கு வந்ததாக முதலில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு முரணாக எனது மருமகன் அவரை மயிலாடுதுறைக்கு அழைத்து வந்து விட்டதாக மாற்றி சொல்கிறேன் என்றால் தவறு என் மகள் காலை 9.00 மணிக்கு அவர் கணவரோடு அன்றைய தினம் மயிலாடு துறைக்கு வந்தார்.

என் மகள் பிள்ளைகளை விட்டுவிட்டு தனியாக வர வாய்ப்பில்லை என்றால் மூத்த பிள்ளை பள்ளிக்கூடம் சென்றுவிட்டது. இளைய பிள்ளை என்

மகளோடு வந்தது. இந்த விபரங்களை எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 03.12.2019 அன்று காலை எனது மகள் 1 ம் எதிர் மனுதாரர் வீட்டிலிருந்து சொல்லாமல் கொள்லாமல் கிளம்பி சென்றுவிட்டு இரவு 10.00 மணிக்கு தான் திரும்பினார் என்றாலும் அது குறித்து 1 ம் எதிர்மனுதாரர் அவரிடம் கேட்டதற்கு நான் என் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் சென்று வருவேன் அதை கேள்வி கேட்க நீ யார் என்று 1 ம் எதிர் மனுதாரர் தான் சண்டை யிட்டுள்ளார் என்றால் தவறு அப்போது சண்டை ஏற்பட்டது எதனால் என்று எனது முதல் விசாரணையிலேயே சொல்லியுள்ளேன்.

1ம் எதிர்மனுதாரர் திருமணமான முதலே அவர் சம்பாதித்த பணத்தை என் மகளிடம் தான் கொடுத்து வந்தார் என்றாலும் அதனை அவர் ஆடம்பரமாக செலவு செய்து வந்தார் என்றாலும் சரியல்ல. அதுபோல எனது மகள் 1ம் எதிர் மனுதாரர் ரோடு ஒழுங்காக குடும்பம் நடத்தாமல் அடிக்கடி வீட்டை விட்டு சென்று விடுவார் என்றாலும் அதுபற்றி கேட்டால் சண்டை செய்வார் என்றாலும் சரியல்ல. அவ்வாறு சண்டை நடக்கும் போது 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் அது பற்றி சொல்லியுள்ளார் என்றாலும் நான் உடனே நேரடியாக வந்து அதில் தலையிட்டு எனது மகளுக்கு புத்திமதி சொல்லி உள்ளேன் என்றாலும் சரியல்ல. அப்படி எதுவும் நடக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் எனது மகள் வாழ்ந்த போது, திருமணமான 6 மாதத்திலேயே மற்ற எதிர் மனுதாரர்களோடு சண்டை செய்து அவர்களை சரிவர பராமரிக்காமல் கொடுமை செய்தார் என்றால் சரியல்ல. அவர்கள் தான் என் மகளை கொடுமை செய்தார்கள். என் மகளை அந்த வீட்டில் தனியாக விட்டுவிட்டு அந்த வீட்டு தண்ணீர் பைப், கரண்ட் கனெக்சன் ஆகியவற்றை துண்டித்து விட்டு, அடுப்பங்கரையில் சமையலுக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களை எல்லாம் எடுத்துக்கொண்டு வேறு வீட்டிற்கு சென்று வசித்தார்கள். ஆகவே அவர்கள் தான் என் மகளை கொடுமைப்படுத்தினார்கள்.

அவ்வாறு அவர்கள் வேறு வீட்டில் தான் சென்று வசித்தார்களா என்றால் இல்லை. அதன் பிறகு நான் என் மகளை எனது வீட்டிற்கு அழைத்து வந்து விட்டேன். என் மகளை நான் அழைத்து வந்துவிட்ட பிறகு அவர்கள் மீண்டும் அதே வீட்டிற்கு திரும்ப வந்து விட்டார்கள். என் மகளை எப்போது அழைத்து வந்தேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எதற்காக அழைத்து வந்தேன் என்றால் எந்த பொருட்களும் இல்லாத வீட்டில் தனியாக வசிக்க முடியாது என்பதால் அழைத்து வந்துவிட்டேன். அப்போதிலிருந்து இதனால் வரையிலும் என் மகள் என் வீட்டில் தான் இருக்கிறாரா என்றால் இல்லை. பிறகு சமாதானம் பேசப்பட்டு 6 மாதங்கள் கழித்து 1ம் எதிர் மனுதாரர் வந்து சமாதானம் பேசி

அழைத்துச் சென்றார். 1ம் எதிர்மனுதாரர் வெளிநாடு சென்ற பிறகு என் மகள் ஒழுங்காக குடும்பம் நடத்தாமல் எதிர்மனுதாரரின் பெற்றோர்களோடு சண்டை செய்து வந்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் என்னுடைய மகளுக்கு ஆதரவாக இருந்து கொண்டு என் மகளுக்கு உடந்தையாக செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே ஒரு கொலை வழக்கில் குற்றவாளி என்பதால் நான் எதிர்மனுதாரர்களை மிரட்டி வந்தேன் என்றால் தவறு. நான் அப்படி செய்யவில்லை. கடைசியாக என் மகள் 03.10.2021 அன்று என்னுடைய மகள் தான் மிகக் கடுமையாக சண்டை செய்து கொண்டு என் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் தவறு. அவர்களுக்கு சண்டை ஏற்பட்டு இருந்தால் 1ம் எதிர்மனுதாரர் அன்றைய தினம் என் மகளை ஜவுளி போட அழைத்து வந்து விட்டிருக்க மாட்டார்.

நான் குடியிருப்பது ஒரு கிராமம் என்றால் சரிதான். அதில் என்னுடைய பங்காளிகள் நிறைய பேர் குடும்பமாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அதனால் எங்கள் ஊரில் என்னிடம் யாரும் பிரச்சனை செய்துவிட்டு ஊரை விட்டு வெளியே செல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணையில் 1ம் எதிர்மனுதாரர் என்னுடைய மகளை அடித்து கொண்டு வந்து என்னுடைய வீட்டு வாசலில் போட்டதாக சொல்வது பொய் என்றாலும் அப்படி செய்திருந்தால் நான் அவரை எனது ஊரில் கட்டி வைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் இரவு 11 மணிக்கு எங்கள் வீட்டு கேட் வாசலில் எனது மகளை இறக்கிவிட்டு, எனது பேத்தியை கதவுக்கு உள்ளே தூக்கி நிறுத்தி வைத்துவிட்டு, 1ம் எதிர் மனுதாரர் காரில் அமர்ந்திருந்தார். எனது பேத்தி வந்து என் வீட்டு கதவைத் தட்டி எழுப்பவே, நான் வெளியே கதவை திறந்து பார்த்தபோது என்னை பார்த்தவுடன் 1ம் எதிர் மனுதாரர் காரை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். அந்த சமயத்தில் நான் தூங்கிக் கொண்டிருந்தேனா என்றால் ஆமாம். அந்த சமயத்தில் எங்கள் தெருவில் யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. ஆனால் நான் சத்தம் போட்ட பிறகு கலியபெருமாள் மட்டும் சேகர் ஆகிய இரண்டு அண்டை வீட்டுக்காரர்கள் அங்கு ஓடி வந்தார்கள்.

நான் என்னுடைய முதல் விசாரணையில், மேற்படி சம்பவத்தின் போது நான் என் மனைவி உட்பட சில நபர்கள் வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்ததாக சொல்லிவிட்டு தற்போது அதற்கு முரணாக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு என் முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறா என்றால் தவறுதான். இது குறித்து நான்

என் மகளோடு பூம்புகார் காவல் நிலையம் சென்று 1ம் எதிர்மனுதாரர் மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் என் மகளை சீர்காழி அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். அங்கு வந்த பூம்புகார் போலீசார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்தார்கள். அந்த வழக்கை விசாரித்த போலீசார் 1ம் எதிர் மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்பதால் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அது கொரோனா காலகட்டம் என்பதால் அவரை கைது செய்து உடனடியாக விடுவித்து விட்டார்கள். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால் நான் மீண்டும் ஒரு பொய் புகாரை ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றாலும் அதன் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் நான் பொய் புகார் கொடுக்கவில்லை. நான் கொடுத்த புகார் உண்மைதான். அந்த புகாரில் உண்மை இல்லை என்பதால் போலீசார் 1ம் விடுவித்து விட்டார்கள் என்றால் சரியல்ல அவர்கள் கைது செய்து பிணையில் தான் விட்டார்கள்.

எனது முதல் விசாரணையில் சொன்னது போல நான் எனது மகளுக்கு நகை சீர்வரிசை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் எனது பேரப்பிள்ளைகளின் சான்றிதழ்களை 1ம் எதிர் மனுதாரர் வீட்டில் வைத்திருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் என் மகளை வரதட்சணை கொடுமை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதே போல திருமணத்தின் போது செய்யப்பட்ட நகைகளை 1ம் எதிர் மனுதாரர் பிடுங்கி விற்று விட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள நகை ரசீதுகள் எனது மகள் திருமணத்திற்காக வாங்கப்பட்டது கிடையாது என்றாலும் நான் எப்பவோ வாங்கிய நகைகளை வழக்கிற்காக தவறாக சித்தரிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதேபோல மற்ற நகை ரசீதுகள் எதிர் மனுதாரர் வீட்டில் இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நகைகளோடு சேர்த்து நான் ரசீதையும் தான் கொடுத்தேன்.

1ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் நிறைய சம்பாதித்து நகை பணம் ஆகியவற்றை அனுப்பி வைத்தார் என்றாலும் அதனை என் மகள் அவர் இஷ்டம் போல செலவு செய்தார் என்றாலும் என்னிடமும் கொடுத்து வைத்தார் என்றாலும் சரியல்ல. அவ்வாறு 1ம் எதிர் மனுதாரர் சம்பாதித்த நகைகளை வைத்து தான் எனது மற்ற மகள்களை நான் திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக மனுதாரர் சொல்லி உள்ள காரணங்கள் எதுவும் சரியல்ல என்றாலும் என் மகளுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய மகள் தற்போது அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை செய்கிறார் என்றால் சரியல்ல. எனது ம பணியாற்றுகிறார் என்றால் சரியல்ல எனது மகளுடைய அசல் சான்றிதழ்களை எதிர்மனுதாரர்கள் கொடுக்கவில்லை என்பதால் அவர் தனியார் பள்ளியில்தான் வேலை செய்கிறார். எந்த பள்ளியில் வேலை செய்கிறார் என்றால் எந்த பள்ளியில் Vacancy இருக்கிறதோ அதன் படி ஒவ்வொரு நாளும்ஒரு பள்ளியில் வேலை செய்வார். எனது மகள் TET Exam Pass செய்துவிட்டார் என்றால் சரிதான். 2013ல் அவர் அந்த பரிட்சையில் தேறினார். ஆகவே அவருக்கு அரசாங்க உத்தியோகம் கிடைத்து தற்போது வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என் மகளுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைத்ததால் தான் 1ம் எதிர் மனுதாரரோடு சேர்ந்து வாழாமல் அலட்சியப்படுத்தி அவர்கள் வீட்டில் இருந்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகளால் 1ம் எதிர் மனுதாரரின் வாழ்க்கை பாழாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ள தகவல்கள் அனைத்தும் வழக்கிற்காக சொன்ன பொய்கள் என்றால் சரியல்ல.

**எதிர் மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை**